(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஓ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN : Mr. Speaker, Sir, I beg to introduce "The Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Bill, 1975 *" and move that the same be taken into consideration.

By an amendment to the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956), the Government of India have increased the maximum rate of sales tax in respect of goods declared to be of special importance in inter-State trade or commerce from 3 per cent to 4 per cent with effect from the 1st July, 1975. This enabled the State Government to raise the rate of local sales tax on declared goods in respect of inter-State sales up to the said maximum rate of 4 per cent from the 1st July, 1975. The Government decided that the rate of local sales tax on 'iron and steel' falling under item 4 of the Second Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959, be raised from 3 per cent to 4 per cent with effect from the 1st July, 1975 and that in respect of other declared goods no increase need be made for the present.

The Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 5 of 1975) was accordingly promulgated to make suitable consequential amendments in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (Tamil Nadu Act 14 of 1970) and the Tamil Nadu Sales Tax (Sur-

* 21–10–1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

charge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971). The present Bill before the House seeks to replace the said Ordinance by an Act of the Legislature.

Sub-section (2) of section 22 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 provides for imposition of penalty if any person or registered dealer collects any amount by way of tax or purporting to be by way of tax in contravention of the provisions of sub-section (1) of that section, whether or not any tax is due from such person or dealer under the Act in respect of the transaction in which he collects the amount. There is no similar provision in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970. It has, therefore, been decided to insert such a provision introducing a new section 3-A in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970.

Sir, I commend the motion, for the acceptance of the House.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் சொன்னது மத்திய அரசாங்கத்தினுடைய இண்டர்ஸ்டேட் வரியை 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக இருக்கிறதனைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறபோது அதிலே ஒரு வார்த்தை, அதாவது டிக்ளேர்ட் கூட்ஸ், Iron and Steel க்குப் போட்டிருக்கிறோம் என்றார்கள். மற்ற பொருள்கள் என்ன? மற்ற பொருள்களுக்குப் போடவில்லையென்றால் எல்லாவற்றிற்கும் 3 சதவீதமாகவே வைத்திருக்கலாமே. இவைகளுக்கு மட்டும் போடக் காரணம் என்ன? மற்ற பொருள்கள் என்ன என்ற விவரம் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, பொதுவாக டிக்ளேர்ட் கூட்ஸ் என்பதற்கு உதாரணம் சொல்கிறேன்.

" Coal, Cotton, Cotton yarn, Iron and Steel, Jute oil seeds raw hides and skins, dressed hides, and skins, bura sugar, sugar-candy and sugarcandy honey drained from raw sugar . . ."

இந்த மாதிரியாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, நான் கேட்டது இத்தனை டிக்ளேர்ட் கூட்ஸ் இருக்கும்போது Iron and Steel தவிர மற்றவைகளுக்கு ஏற்றவில்லை என்பது கொள்கையளவில் செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அவைகளுக்கும் விற்பனை வரி அதிகரிக்கவேண்டுமென்றால் பின்னால் பார்ப்போம். இன்று இவைகளுக்கு ஏற்றினால் போதும் என்று ஏற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்கிற கருத்தை அநேக உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.